வந்திருக்கிறது. ஆனால், நண்பர் திரு. மணி அவர்கள் சொன்னது போல, பழைய கிணறுகளை ஆழப்படுத்துவதற்கு 'அலாட்மெண்ட்' கிடையாது. அதற்காக புதிய 'அலாட்மெண்ட்' செய்ய ஏதாவது அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

கனம் திரு. பூ. கக்கன் : பழைய கிணறுகளை ஆழப்படுத்துவதற்கும் அரசாங்கம் நிதி ஒதுக்கியிருக்கிறது. 1965-66-ம் ஆண்டில் ஒன்றரை லட்ச ரூபாய் செலவில் 80 கிணறுகள் ஆழப்படுத்தப் பட்டிருக்கின்றன, நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 610 கிணறுகளை ஆழப்படுத்துவதற்காக ரூ. 12.20 லட்ச ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

* 364 கேள்வி.—**திரு. நா. இராசாங்கம்** : கனம் உள்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தென் ஆற்காடு மாவட்டம், கடலூர் தாலூகா, பார்வதிபுரம் கிராமத்தில் 1957-ம் ஆண்டு Bore weli ஒன்றும் 1959-ல் ஆர்ட்டிஷியன் கிணறுகள் இரண்டும் அமைக்கப்பட்டது உண்மையா ?

(இ) இவைகளில் ஆர்ட்டிஷியன் (ஊற்றுக்) கிணறுகள் இரண்டும் கெட்டுவிட்டது உண்மையா ?

(உ) கெட்டுவிட்ட கிணறுகளைப் பழுதுபார்க்க வேண்டுமென அங்குள்ள விவசாயிகள் அண்மையில் கோரிக்கை ஏதேனும் அரசாங்கத்துக்கு கொடுத்துள்ளனரா?

(எ) ஆம் எனில், அதன்மீது எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

கனம் திரு. பூ. கக்கன் : (அ) 1957-ல் குழாய்க் கிணறு ஒன்றும், 1960-61-ல் ஊற்றுக் கிணறுகள் இரண்டும் வெட்டப்பட்டன.

(இ) முதல் (எ) வரை : 1960-லும் 1961-லும் அமைக்கப்பட்ட இரு ஊற்றுக்கிணறுகள் நெய்வேலித் திட்டப் பகுதியில் நீரை அதிகமாக இறைப்பதனால் நீர் வேகம் குறைந்து துணை ஊற்றுக் கிணறுகளாக மாறிவிட்டன. அவற்றைச் செப்பனிடும்படி குடியானவர்களிடமிருந்து வேண்டுகோள் எதுவும் வரவில்லை. ஆயினும், சிதம்பரம், வேளாண்மை உதவிப் பொறியாளர் மேற்படி கிணறுகளில் பம்பு செட்டுகளை நிறுவி, அவை சமுதாயப் பொதுக் கிணறு நீர் இறைப்புத்திட்டங்களாகச் செயல்படுவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்து வருகிறார்.

திரு. நா. இராசாங்கம்: கனம் சபாநாயகர் அவர்களே, பொதுவாகவே, நெய்வேலிக்கு அருகாமையில் உள்ள பகுதி ஊர்களில் நெய்வேலி நீர் ஊற்றினால்தான் தண்ணீர் நின்று விட்டது என்று காரணம் சொல்கிறார்கள். அதை யாரும் இன்வெஸ்டிகேஷன் பண்ணவில்லை. நெய்வேலிக்கு 1 மைல், 1½ மைலில் நல்ல நீர் ஊற்றுள்ள கிணறுகள் கிடைத்திருக்கின்றன. அதைப் பரிசீலனை செய்து பார்ப்பார்களா? இல்லை என்றால் 60 ஏக்கரா, 70 ஏக்கரா மணிலாப் பயிர்கள் சாகுபடி கெட்டு வருகிறது.

கனம் திரு. பூ. கக்கன் : நான் முதலில் சொன்ன பதிலிலேயே சொல்லியிருக்கிறேன். அந்தப் பகுதியில் உள்ள விவசாயிகள் கேட்டிருக்கிறார்களா என்பது கேள்வி. நான், இல்லை என்று சொன்னேன். சில இடங்களில் உள்ள கிணறுகளைப் பரிசீலனை செய்து பார்த்து சமுதாயப் பொதுக்கிணறுகளாக அவற்றை வெட்டி பம்பு செட்டு இணைத்துக் கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது.

திரு. சா. கணேசன் : ஆர்ட்டீஷியன் வெல்ஸ் என்று சொல்லக் கூடிய குமிழிக் கிணறுகள் எந்த முறையில் அமைக்கப்பட்டன? இயற்கையாக ஊற்று உள்ள இடத்தில் அந்த ஊற்றுக்கண் திறந்திருக்கும்படியாக அமைப்பது தான் முறை. இங்கே குழாய்கள் அமைக்கும்போது கீழோ, மேலோ ஊற்றுக்கண் மூடிக்கொள்ளும் படி. அமைத்துவிட்டார்களா? அதைப் பரிசீலனை செய்தார்களா? அந்தப் பரிசீலனையினால் கிடைத்த முடிவு என்ன, நடவடிக்கை என்ன என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. பூ. கக்கன் : குறிப்பாக நெய்வேலி வட்டாரத்தில் தானாக ஊற்று வந்துகொண்டிருந்தது. அதை விவசாயிகள் பயன் படுத்திக் கொண்டிருந்தார்கள். மெஷின் வைத்து இறைப்பதன் மூலம் தண்ணீர் ஆழத்தில் இறங்கிவிட்டது. ஆகவே, பம்பு செட்டு வைத்து இறைத்துப் பயன்படுத்த வேண்டும். அதற்கு ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது.

திரு. கரு. சீமைச்சாமி : கனம் அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிறபோது சமுதாயக் கிணறுகள் எடுக்கப்படுவதாகச் சொன்னார்கள். சமுதாயக் கிணறுகள் எடுக்கவேண்டும் என்பதாக ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனிலும் தீர்மானம் போட்டு அரசாங்கத்திற்கு. அனுப்பி வைக்கப்பட்டிருக்கிறது. இது வரைக்கும் எந்தக் கிணறும் தோண்டப்படவில்லை. சமுதாய நலக் கிணறுகள் தோண்ட இனியாகிலும் அரசாங்கம் உத்தரவிடுமா?

கனம் சபாநாயகர் : யாருக்கு அனுப்பியிருக்கிறார்கள்? அக்ரிகல்சர் டிபார்ட்மெண்டுக்கா?

திரு. கரு. சீமைச்சாமி : ஆமாம்.

கனம் திரு. பூ. கக்கன் : சமுதாயக் கிணறுகள் வெட்ட வேண்டும் என்பதுதான் அரசாங்கத்தின் அவா. அதைத்தான் அரசாங்கம் பரிசீலனை செய்துகொண்டிருக்கிறது. அப்படித் தோண்டுவதாக இருந்தால் பஞ்சாயத்தோ, சொஸைட்டியோ முன் வந்து பொறுப்பை ஏற்பதாக இருந்தால், நல்ல நீர் ஊற்று உள்ள இடங்களில் ஏற்படுத்தலாம்.

'ஹோல்ஸ்வொர்த்' அணை

* 365 கேள்வி.—திரு. பி. முருகையன் : கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

புதுக்கோட்டைப் பகுதியில் உள்ள "ஹோல்ஸ்வொர்த்" அணையில் 1965 டிசம்பரில் பெய்த பெரு மழையின் காரணமாக